enable us to effectively participate in the discussion. I would like to have a ruling from the Chair whether the introduction of the Bill can be postponed to some other date, or whether it will be taken up today itself.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அறிவிப்பு கொடுக்கிற விதிகளுக்கெல்லாம் விதிவிலக்கு கொடுக்கலாம் என்ற விதி இருப்பது பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரியும். புதிதாக கொண்டு வந்திருக்கிற விதி இதுபோன்ற மசோதாக்களுக்கும் பொருந்தும். இந்த சட்ட முன்வடிவை 5-ம் தேதிதான் எடுக்கப் போகிறோம். எனவே, இன்றைக்கு அறிமுகப்படுத்துவதில் தவறு இருக்காது. அவசரமாக அனுப்பியிருக்கிறோம். அங்கத்தினர்களுக்கு அவகாசம் இல்லையென்ற வாதம் வராது. விதிவிலக்கு கொடுத்திருப்பதுதான் நியாயம் என்று கருதுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The hon. Member will know as a lawyer that 'shall' will mean 'may' and 'may' will mean 'shall' according to the occasion.

THIRU R. PONNAPPA NADAR : Now it is construed as 'may'.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) 1975 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.